சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

**H.M.OP**.04 /2024

**பெயர்**:-ரேணுகா **நாள்**: 16.09.2025

**எ.ம.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.**

**எ.ம.சா.1 மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனக்கு முதல் குழந்தை பிறந்த உடன் மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் என் வீட்டிற்கு வந்து குழந்தைக்கு பெயர் வைத்துதான் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு குழந்தைக்கு பெயர் வைக்கும் விழாவில் என் உறவினர்கள் மற்றும் என் தாய் மாமா வந்துள்ளார் என்றால் தாய்மாமா வரவில்லை, அவருடன் பேச்சு வார்த்தை இல்லை. முதல் குழந்தை பிறந்த பின்னிட்டு மனுதாரர் குடும்பம் நடத்துவதற்கு தேவையான பொருட்களை வாங்கி தரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அடிக்கடி சண்டைபோட்டு மனுதாரர் என்னை என் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிடுவார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா சமாதானம் செய்து கொண்டு வந்து விடுவார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் குழந்தையின் படிப்பு செலவை நான்தான் பார்த்துக்கொண்டேன் என்பதற்கு பள்ளியில் இருந்து கல்வி கட்டண இரசீது எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதலில் இருந்தே மனுதாரர்தான் குழந்தைக்காக கல்வி கட்டணத்தை செலுத்தி வருகிறார் என்பதால்தான் என்னால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக என்னுடைய மனுவில் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் மாமியார் கொடுமை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். மனுதாரர் என்னை வரதட்சணை கேட்டு கொடுமை

செய்யாததால்தான் நான் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுதாரர் என்னை வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக 21.10.2015ம் தேதி அன்று மலையம்பாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாமியார் பெயரில் கொடுத்தேன். மாமியார் பெயரில்தான் வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தியதாக எனது அறிவிப்பிலும், மனுவிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எங்கும் குறிப்பிடவில்லை என்றாலும், மனுதாரரை பழிவாங்குவதற்காக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான புகார் என்பதால்தான் போலீசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மாமியார் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2வது முறை நான் கருவுற்றதை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2020ம் வருடம் பிப்ரவரி மாதம் தெரிந்து கொண்டேன். மனுதாரர் எனது கருவை கலைப்பதற்காக மருத்துவமனை எப்போது கூட்டி சென்றார் என்றால் மே மாதம் கூட்டி சென்றார். எந்தெந்த மருத்துமனைக்கு எந்தெந்த தேதியில் கூட்டி சென்றார் என்று எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். மனுதாரர் கருவை கலைப்பதற்காக 4 மருத்துவமனைக்கு சென்றதாக கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செக்கப்புக்காக சென்றதாகதான் மருத்துவமனையில் குறிப்பிடுவார்கள். கருக்கலைப்புக்காக என்று குறிப்பிடமாட்டார்கள். செக்கப் சென்றதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2020ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை கொரானா நோய் தொற்று காலம் என்பதால் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்ததால் நான் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வது நம்பத்தகுந்ததாக இல்லை என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்றேன். 4 மருத்துவமனைக்கு கருக்கலைப்பிற்காக மனுதாரர் என்னை அழைத்து சென்றார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது குழந்தை 21.10.2020ம் தேதியில் ஈரோடு, ஓம்சக்தி மருத்துவமனையில் பிறந்தது என்றால் சரிதான். 2வது

குழந்தை பிறந்ததை கூட நான் மனுதாரருக்கு தெரிவிக்காததால் உறவினர்களிடம் தகவல் தெரிந்து அடுத்தநாள் மனுதாரர் குழந்தையை பார்க்க வந்தபோது எனது பெற்றோர்கள் குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்றால் தவறு. தகவல் தெரிவித்தும் மனுதாரர் வந்து குழந்தையை பார்க்கவில்லை. முதல் விசாரணை பத்தி 13ல் 2வது குழந்தை பிறந்தது முதல் இன்று வரை நான்தான் குழந்தையை பராமரித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாக்கல் செய்த பின்னிட்டு இடைக்கால ஜீவனாம்சம் கோரி 2023ம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் எனக்கும் எனது குழந்தைகளுக்கும் மாதம் ரூ.21,000/- இடைக்கால ஜீவனாம்சம் செலுத்த உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் 2023ம் ஜூலை ஆண்டு முதல் மேற்படி தொகையை பெற்று வருகிறேன் என்றால் சரிதான். இந்த மாதம் வரை எனது வங்கி கணக்கில் ஜீவனாம்ச தொகை தவறாமல் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் குழந்தைகள் பராமரிப்பிற்கு மனுதாரர் எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2023ம் ஆண்டு வரை கொடுக்கவில்லை. முதல் குழந்தைக்கு 3 மற்றும் 4ம் வகுப்பிற்கு பள்ளி கட்டணம் மனுதாரர் செலுத்தாமல் நீதிமன்ற உத்தரவின்பேரில்தான் பள்ளிக்கட்டணம் செலுத்தினார். முதல் குழந்தைக்கு 3 மற்றும் 4ம் வகுப்பிற்கு பள்ளி கட்டணம் மனுதாரர் செலுத்தவில்லை என்று எனது இடைக்கால ஜீவனாம்ச மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்துள்ளேன். நீதிமன்றம் அவ்வாறு உத்தரவிடவில்லை என்றால் சரியல்ல. நீதிபதி வாய் மொழியாக உத்தரவிட்டதன் பேரில் பள்ளிக்கட்டணம் செலுத்தினார். இடைக்கால ஜீவனாம்ச மனு விசாரணையில் இருக்கும்போது மனுதாக்கல் செய்வதற்கு முன்பும், பின்பும் மனுதாரர் பள்ளிக்கட்டணம் செலுத்திய இரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளார் என்றால் மனுதாக்கல் செய்வதற்கு முன்பு பள்ளிக்கட்டணம் செலுத்தவில்லை. சில மாதங்களுக்கு முன்பு மனுதாரர் வழக்கறிஞர் மூலம் குழந்தைகளை பள்ளி விடுமுறை நாட்களில் தன்னுடன் வைத்துக்கொள்ள கேட்டாரா என்றால் இல்லை. தற்போது குழந்தைகளை விடுமுறை நாட்களில் சில சமயம் மனுதாரர் உடன் இருக்க

ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஒப்புக்கொள்கிறேன். அந்த சமயத்தில் குழந்தைகளுடன் நானும் இருக்க விரும்புகிறேன்.

**மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.16 13:36:35 +0200<br><br>Subordinate Judge,<br>Kodumudi |